**செய்தி வெளியீடு எண்: 582** **நாள் :17.11.2014**

**மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்களின் தலைமையில் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை ஆய்வு கூட்டம்**

**மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி** 17.11.2014 அன்று தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் செயல்பாடுகள் குறித்த ஆய்வு, மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்களின் தலைமையின் கீழ் நடைபெற்றது. தோட்டக்கலை துறையின் இயக்குநர் திரு.லி.சித்ரசேனன், இ.ஆ.ப., அவர்கள் மற்றும் ஏனைய தோட்டக்கலைத்துறையின் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

உயர்ரக விதை மற்றும் தரமான நடவுச்செடிகள் அனைத்து மாவட்ட விவசாயிகளுக்கும் வழங்க ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம், நீலகிரி மலை வாழ் மக்கள் மேம்பாட்டிற்கான மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமும் மானியம் வழங்குவது தொடர்பாக அறிவுரை வழங்கினார். தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் உயர் தொழில் நுட்ப உற்பத்தி பெருக்குத் திட்டம், தேசிய தோட்டக்கலை மற்றும் தேசிய மூங்கில் இயக்கம் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி இயக்கம், பண்ணை நீர் மேலாண்மை மற்றும் மானாவாரி பகுதி மேம்பாடு ஆகியவற்றை உள்ளடக்கிய நிலையான வேளாண்மை வளர்ச்சிக்கான தேசிய இயக்கம், ஆயுஷ் மூலம் செயல்படுத்தப்படும் தேசிய மூலிகைப்பயிர்கள் இயக்கம், உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் நீர் வள நில வளத் திட்டம் ஆகிய திட்டங்களை செவ்வனே செயல்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டார்கள்.

**மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தொலைநோக்கு பார்வையான** தோட்டக்கலை பயிர்களின் உற்பத்தி திறனை இருமடங்காக்கி விவசாயிகளின் வருமானத்தை மூன்று மடங்காக்க, அனைத்து திட்டப்பணிகளையும் குறித்த காலத்தில் குறிப்பாக சிறு/குறு விவசாயிகள் நலன் பெறும் வகையில் நிறைவேற்ற வேண்டும் என்றும் திட்டத்திற்கு உரிய இடுபொருட்கள் அனைத்தும் காலத்தே விவசாயிகளிடத்தில் சென்றடைய உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கினார்.

**மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கடந்த சட்டப்பேரவைக் கூட்டத்தொடரில் விதி எண்.110—ன்** கீழ் அறிவித்த அம்மா பண்ணை மகளிர் குழுக்களின் துவக்க முகாமானது **21.11.2014** அன்று தமிழகமெங்கும் அனைத்து வட்டாரங்களிலும் சீரிய

முறையில் துவக்க மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கினார்.

தமிழகத்தில் 22 மாவட்டங்களில், 56 அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் விவசாயிகளுக்குத் தேவையான தரமான மரபுசார் நடவுச்செடிகள் பல்வேறு திட்டங்கள் மூலம் உற்பத்தி செய்து விநியோகம் செய்யப்படுகின்றன. இந்த அரசு தோட்டக்கலைப் பண்ணைகள், புதிய தொழில் நுட்பங்களை விளக்கும் செயல்விளக்க மையங்களாக இயங்கி வருவதை உரிய வகையில் கண்காணிக்கவும் சீரிய முறையில் செயல்படுத்தவும் கேட்டுக்கொண்டார்.

இந்தியாவில் தமிழகத்தில் மட்டுமே சிறு குறு விவசாயிகளுக்கு உதவும் வண்ணமும், சாகுபடி பரப்பினை அதிகரிக்கும் முகமாகவும் 100 சத மானியத்தில் நுண்ணீர் பாசனத் திட்டம் சிறந்த முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதனை செவ்வனே செயல்படுத்த வேண்டுமென அறிவுரை வழங்கினார்கள்.

தமிழக மக்களின் ஊட்டச்சத்து தேவையினை பூர்த்தி செய்யும் வகையில் சென்னை, கோவை, திருச்சி, மதுரை மற்றும் சேலம் பெருநகரங்களை சுற்றியுள்ள மாவட்டங்களில் காய்கறி உற்பத்தியினை அதிகரிக்கும் வண்ணமும் உற்பத்தியாளர் மற்றும் நுகர்வோரை இணைக்கும் முகமாகவும் “பெருநகர காய்கறி தொகுப்பு வளர்ச்சித் திட்டமானது” செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன் செயல்பாடுகள் குறித்து தோட்டக்கலை இயக்குநர் விளக்கினார்.

விவசாயிகளின் ஆளுமைத்திறனை மேம்படுத்த விவசாயிகளை ஒருங்கிணைத்து விவசாயிகள் ஆர்வலர் குழுக்களும் உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளும் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருவதை கண்காணிக்க அறிவுறுத்தப்பட்டது.

பயிர்களுக்கு உகந்த காலநிலையை உருவாக்கி குறைந்த பரப்பளவில் நிறைந்த மகசூல் பெறவும் பருவ மற்றும் பருவமற்ற காலநிலைகளிலும் தோட்டக்கலை விளைப்பொருட்கள் தடையின்றி கிடைக்க பசுமைக்குடில் மற்றும் நிழல் வலை சாகுபடியானது தோட்டக்கலை துறை மூலம் விவசாயிகளிடையே ஊக்குவிக்கப்பட்டு வருகிறது. இதனை எந்தவித தொய்வுகளும் இன்றி செயல்படுத்த மாண்புமிகு அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

இக்கூட்டத்தில் அனைத்து மாவட்ட தோட்டக்கலை இணை/துணை இயக்குநர்கள் கலந்து கொண்டு அந்தந்த மாவட்டம் தொடர்பான விபரங்களை ஆய்வின்போது தெரிவித்தனர்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**